வைகுந்தம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கை
முன்னிலை திரு.மா.செல்வம்,DME,AMIE.,

நக.எண்: 08/2023 நாள்: 10/08/2023

பொருள்:

புதிய குடியிருப்பு மனைப்பிரிவு சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம் மகுடஞ்சாவடி ஒன்றியம் - வைகுந்தம் ஊராட்சி கெடிகாவல் கிராமம் சர்வே எண் 88/1C மற்றும் 88/2B ல் அமையப்பெற்றுள்ள புதிய மனைப்பிரிவு – ஒப்புதல் செய்து ஆணையிடல் சார்பு.

பார்வை:

1. சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின்கடிதம் ந.க.எண் SLMF204Q846/6607/2022/TCP நாள்:23-02-2023.
2. மனுதாரர் திரு.பி.சண்முகம் அவர்களின் ஆண்லைன் விண்ணப்ப எண்: F204-Q846 நாள்: 08-12-2022.
3. மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம் சேலம் மாவட்டம் உத்தேசமனைப்பிரிவுக்கு சாலை அமைப்பு வரைபடம் நாள்: 03-02-2023 ல் வழங்கப்பட்டுள்ளது.
4. நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 320/2022/TCP3 நாள்:07-01-2022.
5. G.O 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகம் நாள் 04-02-2019 மற்றும் G.O 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகம் நாள் 31-01-2020.
6. G.OB181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:09-12-2020.
7. வீட்டு வசதி மற்றும் நகர்புறவளர்ச்சி துறை கடிதம் எண் 1911/3 UD3 2017-1 நாள்:30-08-2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் எண் 13686/2017/LA1 நாள்:08-09-2017.

பார்வை 2ல் சுட்டிய மனுதாரர் கடிதத்தில் சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் வைகுந்தம் ஊராட்சி கெடிகாவல் கிராமம் நில அளவை எண் 88/1சி, 88/2பி பரப்பு 0.9725 ஏக்கர் அல்லது 3940 சதுர மீட்டரில் உத்தேச குடியிருப்பு மனைபிரிவுக்கு ஒப்பதல் கோரியுள்ளார் அதன் தொடர்ச்சியாக பார்வை 3-ல் சுட்டிய கடிதத்தில் உத்தேச மனைப்பிரிவுக்கு சாலை அமைப்பு வரைபடம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் சேலம் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட நகர ஊரமைப்பு துறை கடிதம் நாள்:03-02-2023ன் படி மனுதாரரால் உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் சாலை மூலை முடுக்குக்குரிய தான பத்திரத்தை உள்ளாட்சிக்கு 17-02-2023ல் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே உத்தேச குடியிருப்பு மனைபிரிவுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனைபிரிவுக்கு SWP/DTCP/SALEM/LAYOUT NO 77/2023 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கி அதன் மூல நகல் 2 தொகுப்பு மற்றும் தான பத்திர ஆவணம் ஆகியவற்றுடன் மேல் நடவடிக்கைக்காக உள்ளாட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2. மேலும் உத்தேச மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும் போது அதன் உத்தரவு நகலை சமாப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. உள்ளாட்சி ஒப்புதல் அளித்த பிறகு அதன் குடியிருப்பு மனைப்பிரிவு நகல் மற்றும் உத்தரவு நகளினை தகவலுக்காகவும் மேல் நடவடிக்கைக்காவும் உரிய சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் நில அளவை துறைக்கும் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு நகல் மற்றும் உத்தரவு ஆனை பெற்றுக்கொண்டதற்கு ஒப்புகை சான்று அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கபட்டதற்கு இணங்க ஒப்புகை சான்று சமர்பிக்கப்படுகிறது.
5. பார்வை 4ல் சுட்டிய சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளதற்கிணங்க நாளது தேதிவரை தமிழன் இணையதளத்தில் பதிய இறுதி ஒப்புதல் வழங்கிய மனைப்பிரிவு நகல் மற்றும் உத்தரவு நகலினை வட்டாச்சியர் சங்ககிரி அவர்களுக்கு சமர்பிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1b) உள்ளாட்சி நிர்ணயித்துள்ள அளவுகளின்படி தெருவிளக்கு, மேல் நிலை நீர் தேக்க தொட்டி மழை நீர் வடிகால் தார்சாலை போன்ற வசதிகளுடன் உத்தேச மணைப்பரிவால் அமைத்த பிறகு மனைபிரிவுக்கு தேவையான கட்டணங்களை வசூலித்தக் கொண்டு மேற்படி மணைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க தெரிவித்துள்ளதறக்குகிணங்க மனுதாரரால் தார்சாலை மற்றம் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.
2. உத்தேச மனைப்பிரிவில் குறிப்பிட்டுள்ள பூங்கா மற்றும் உத்தேச சாலையை உரிய உள்ளாட்சிக்கு ஒப்படைக்குமாறு தெரிவித்துள்ளதற்கு இணங்க பொது உபயோகம் PPI மற்றும் உத்தேச சாலைகள் மூலைமுடுக்கு ஆகியவற்றை தானபத்திரம் மூலமாக உள்ளாட்சிக்கும் பொது உபயோகம் PP2வை தானபத்திரம் மூலம் மேற்பார்வை பொறியாளர் தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கும் சமரபிக்கப்பட்டுள்ளது.
3. அரசாணை 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04-05-2017 ல் விதி 3ன் படி திட்டமில்லா பகுதியாக இருப்பின் கூராய்வு கட்டணம் மணை ஒன்றுக்கு ரூபாய் 1000/- வீதம் வசூலிக்குமாறும் விதி 9ன் படி நில உபயோக மாற்றத்திற்கு சந்தை மதிப்பில் 3% மனைப்பிரிவு பரப்பிற்கு கீழ் கண்ட தலைப்பில் வசூலிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>HEAD OF ACCOUNT</u>

0217 Urban Development – 60 Other Urban Development Schemes – 800 Other Receipts – As Receipts Under Land Use Conversion charges – 27 Non Taxation Fees – 09 Collections (DPC 0217-60-800 As 22709).

நில உபயோக மாற்றத்திற்கு சந்தை மதிப்பில் 3% ரூ. 19500 அரசு சலான் எண்: 20231222004435 நாள்: 22-12-2023-ல் மேற்படி தலைப்பில் செலுத்தி அதன் சலாண் நகல் சமர்பிக்கப்பட்டுள்ளது.

4. அரசானை எண் 112 வீட்டு வசதி மற்றும் நகர்புறவளர்ச்சி துறை நாள்:22-06-2017ல் மனுதாரரை TNRERA நடைமுறைகளை பின்பற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
5. சுற்றிக்கை எண் 12544/14/CB நாள்:04-07-2014 ல் தெரிவித்துள்ளவாறு நில உரிமை குறித்து மனுதாரர் விண்ணப்பத்துடன் அளித்துள்ள குத்தகை பத்திரம் விற்பனைபத்திரம் தானபத்திரம் ஆகியவற்றை கொண்டு தொழில் நுட்ப ஒப்புதல் மற்றம் திட்ட அனுமதி நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்படுகிறது. சொத்து வாங்குபவர் நில உரிமை குறித்து உறுதி செய்து கொள்ளுமாறும் ஏதேனும்

வழக்கு ஏற்படின் தகுந்த வழக்காடு மன்றத்தில் தீர்த்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகள் 2019ன் படி (TNCDBR) கீழ் கண்டவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கூராய்வு கட்டணம் | ரூ. 5910.00 | நாள்:21-02-2023 |
| OSR கட்டணம் | ரூ.33578.00 | நாள்:21-02-2023 |
| நன்னிலை வரி | ரூ. 6600.00 | நாள்:21-02-2023 |

10/08/2023

தலைவர் /வைகுந்தம் ஊராட்சி
மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம்.

தலைவர்,
முதல்நிலை ஊராட்சி,
வைகுந்தம்.

பெறுதல்

திரு.ப.சண்முகம்
கதவு எண் 128/2
முதல் மாடி வி.ஜி.பி.செல்வாநகர் விரிவு
முதல் தெரு வேளச்சேரி
சென்னை-42.

நகல்

1)மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் சேலம்.

2)சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம் அவர்கள் மகுடஞ்சாவடி.

3)வட்டாட்சியர் அவர்கள் சங்ககிரி

4)உதவி இயக்குநர் நில அளவை மாவட்ட ஆட்சியரகம் சேலம்.